Sulekha epress




ஓர் இரவு ரயில் பயணம

# Oru Iravu Rayil Payanam

**Presents Sujatha Rangarajan's eBook**

**Published by** *Sujatha Rangarajan*

**Copyright © 2003** *Sujatha Rangarajan All Rights Reserved*

**Distributed by** Sulekha Epress

**Sulekha, Sulekha.com, Epress, Sulekha Epress, Epress logo and Sulekha logo are trademarks of Smart Information Worldwide Inc.**

NOTICE: This eBook is licensed to the original purchaser only. Duplication or distribution to any person via email, floppy disk, network, print out, or any other means is a violation of International copyright law and subjects the violator to severe fines and/or imprisonment. This book cannot be legally lent or given to others without the written permission of Sulekha.

CONTACT US: Sulekha, 4926 Spicewood Springs Road, Suite 101
Austin, TX 78759, USA

Sulekha, 96 Dr Radhakrishnan Salai, 2nd Floor
Chennai, 600 004, India

epress@sulekha.net



# சுஜாதாவின் முன்னுரை

இந்தக் கதைகள் பெரும்பாலும் இனணய்த்தில் லேசில் கிடைக்காதவை. விகடன் பக்கத்திலும், தேசிகன் பக்கத்திலும் என் கதை கட்டுனரகள் பல உள்ளன. இவைகள் அந்தப் பக்கங்களில் கிடைக்காது தனிப்பட்டு எழுதிய உதிரிக் கதைகள். தீபாவளி மலருக்கோ அல்லது சிறப்பிதழ்களுக்கோ அளித்தவை. இவைகளை சுலேகா அன்பர்களுக்கு பிரத்தியேகமாக அளிப்பதில எனக்கு மகிழ்ச்சி.

இவைகளில் 'திமலா' மட்டும் அம்பலத்திலேயே வெளியாகியுள்ளது. சைன்ஸ் ஃபிக்ஷன் கதைகளில் எனக்குப் பிடித்த ஒன்று என்பதனால் இதை போனசாக கொடுத்துள்ளேன். 'அமுதாவும் அவனும்' மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தின் ஒரு காட்சிக்காக எழுதபட்ட சிறுகதை. இது படத்தில் எப்படி காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அந்தப் படத்தைப் பார்த்த வாசகர்கள் நினைவு கொள்ளலாம். அல்லது விசிடி / டிவிடியில் பார்க்கலாம்.

சிறுகதை பற்றி என்னை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் இங்கு மறுபிரகடனம் செய்திருக்கிறேன். 'சுலேகா' மூலம் நல்ல எமுத்னத ஆதரிக்க இயலும் என்று நம்புகிறேன். முடிந்தால் தேர்ந்தெடுத்து உங்கள் சந்தேகங்களை தீர்த்துவைக்க ஒரு கேள்விபதில் பகுதியை துவக்க எண்ணியுள்ளோம். ஏறத்தாழ 200 சிறுகதையும் ஐம்பது நாவல்களும் பத்துப்பதினைந்து திரைக்கதைகளும் நாடகங்களைளும் ஊடகங்களில் எழுதியவன் என்கிற தகுதியில் என்னால் இயன்ற வரை நல்ல எழுத்துக்கு உதவுகிறேன்.

# ஓர் இரவு ரயில் பயணம்

மினரல் வாட்டர் பாட்டிலும் அவுட்லுக் இதழும் வாங்கிக் கொண்டு ரயில் பெட்டிக்குள் நுழையும்போது உடன் பயணிகளின் பெயர்களைப் பார்த்தேன். மிஸ்டர் அண்ட் மிஸஸ் ரகுராம், குமாரி சந்திரிகா நாயர்.

என் எதிர்சீட்ல் அவர்கள் இருவரும் உட்கார்ந்திருந்தனர். அத்தனை இடம் இருக்கும்போது ஒருவரை ஒருவர் தொட்டுக்கொண்டு அவள் அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டு...

இப்போதெல்லாம் இந்தக் காட்சிகள் என்னை சஞ்சலப்படுத்துவதில்லை. என் காவி உடையைப் பார்த்ததும் அவன் சுருங்கினான். மனைவி விலகிக் கொண்டாள். என் புன்னகை முகமனுக்கு அவனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. மற்றொரு இருக்கையில் வீற்றிருந்த மலையாளப் பெண் என்னைப் பார்த்ததும் அகலமான சினிமா பத்திரிகையில் மறைந்துகொண்டாள். பக்கத்தில் ஒரு திறந்த பொட்டலத்தில் மேல்நாட்டு தொழில்நுட்பத்துடன் செய்த உருளைக்கிழங்கு வறுவல் இருந்தது.

பொதுவாக யாரும் சாமியாருடன் பயணம் செய்யப் பிடிப்பதில்லை. ஏதோ ஒரு விதத்தில அவர்களை ஒழுக்கக் கயிற்றால் கட்டிப் போடுவது போல உணர்கிறார்கள். இவர்கள் இருவரையும் பார்த்தேன். அவனுக்கு 32 வயதிருக்கலாம். மனைவிக்கு மிஞ்சிப் போனால் இருபத்து எட்டா? சோர்வான முகம் அடிக்கடி நகத்தைக் கடித்தாள். கண்கள் பரபரப்பைத் தெரிவித்தன. எப்ப புறப்படும் என்று ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறை கேட்டு பிளாஸ்கைத் திறந்தான். மூடினாள். தண்ணீர் பாட்டிலைத் திறந்தாள். குடித்தாள். மூடினாள். எதிலும் கவனம் இரண்டு மூன்று செகண்டு மேல் தங்காமல் கண்கள் அலைந்தன். அண்மையில் ஒரு உணர்ச்சிப்புயல் அடித்து

ஓய்ந்த தோற்றம் நிமஹறன்ஸில். பார்த்தபோது வினோதினி அப்படித்தான் இருந்தாள்.

அவன் இயல்பாகத்தான் இருந்தான். பெட்டிகளை சீட்டின் அடியில் தள்ளி அவன் ஒரு தலையணையை ஊத ஆரம்பித்தான்.

''இந்த ட்ரெய்ன் எப்ப பாம்பே போகும்?'' என்றேன் எதாவது ஒரு ஆர்வத்தை ஏற்படுத்த.

''தெரியலை சார். அதிர்ஷ்டம் இருந்து வார இறுதிக்குள்ள புறப்படணும் முதல்ல'' என்றான் கேலியாக.

அவள் அவனை தோளை இடித்து அவனை முறைத்துப் பார்த்தான். ''எனக்குத் தெரியும் சார். நாளைக்கு ராத்திரி எட்டுமணிக்கு போயிரும்.''

''நீங்க பாம்பேதான் போறிங்களா?''

''ஆமாம்'' என்றாள் அவனைப் பார்த்துக் கொண்டு.

''பாம்பேல எங்கே?''

கணவனைப் பார்த்து 'எங்கே' என்றாள்.

''அந்தேரி'' என்றான் சுருக்கமாக.

''இஃப் யு டோண்ட் மைண்ட். நீங்க மேல் பர்த்ல படுத்துக்கறிங்களா?'' என்றான்.

இளவயதுக்காரனாக இருக்கிறான். அறுபது வயசு என்னை மேலே படுக்கச் சொல்கிறான். இந்த சுயநலங்களை நிறையப் பார்த்ததினால் எனக்கு வியப்பு ஏற்படவில்லை.

''ராத்திரி ஒன்றிரண்டு முறை எழுந்திருப்பேன். பரவாயில்லை என்றால்...'' இவள் அதற்கு குறுக்கிட்டு ''வேண்டாம் சுவாமி. இவர் அப்பர்பர்த் போவார்.

ஐ டோண்ட் மைண்ட். ரகு நீங்க அவரைப் போய் மேல படுத்துக்கன்னு சொல்றீங்க.'' என்று அதட்டினான்.

''இல்லை. கொஞ்சம் இவ டிஸ்டர்ப்டா இருக்கா.''

''எனக்கு ஒண்ணுமில்லை'' என்றாள் நெற்றியை சுருக்கிக்கொண்டு.

சன்னலோரப் பெண் தன் பையை தலைமாட்டில் வைத்துக்கொண்டு மேல் பர்த்தில் ஏறிக்கொண்டு படிப்பு விளக்கைப் பொருத்தி சினிமா இதழைத் தொடர்ந்தான்.

டிக்கட் பரிசோதகர் உள்ளே வந்ததும் என்னை வணங்குவதை அவர்கள் கவனித்தார்கள்.

கொஞ்சம் நேரம் அவள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ''உங்களை நான் எங்கேயோ பார்த்திருக்கேன். முகம் பரிச்சயமா இருக்குது'' என்றாள்.

''என்னம்மா அவரை தெரியாதுங்கறீங்க.''

அவள்தான் அடையாளம் கண்டுகொண்டாள். ''நீங்க சுவாமி சத்யமூர்த்திதானே?''

''ஆமாம். நான்தான்.''

அவள் என்னைக் காலைத் தொட்டாள். நான் சுருங்கிக் கொண்டேன்.

''நான் உங்க லெக்சரை நாரத கான சபாவில கேட்டிருக்கேன். அதான் முகம் பரிச்சயமானதா இருந்தது. ரகு இவர் ரொம்ப பிரபலமானவர்.''

ரகு ''அப்படியா?'' என்றான். அவனுக்கு சாமியார்களிடம் ஆர்வமில்லை என்பது தெரிந்தது.

மேல்தட்டுப் பெண் என்னை ஒருமுறை எட்டிப் பார்த்துவிட்டு மறுபடி மறைந்தாள்.

டிக்கெட் பரிசோதகர் ''ஒரு கூப்பே காலியா இருக்கு. அங்க ஷிப்ட் பண்ணிறட்டுமா உங்களை.''

''சரி'' என்றேன்.

அவள் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

''எங்களுக்காக மாற்ற வேண்டாம் சுவாமி.''

''இல்லை உங்களுக்கு டிஸ்டர்பன்ஸா இருக்கும். பலபேர் என்னைப் பார்த்து பேச வருவாங்க.'' என்றேன். என்னுடைய குறைந்த பட்ச உடமைகளை டிடியே எடுத்துக்கொள்ள கூப்பே கம்பார்ட்மெண்ட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

அதன்பின் அந்த கணவன் மனைவியை மறந்துவிட்டேன்.

டிக்கட் பர்சோதகர் தன் கடமையை முடித்துவிட்டு வந்தார். அவர் என் சொற்பொழிவுகளுக்கு தவறாமல் வந்திருக்கிறாராம்.

வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தில் அவருக்கு நிம்மதி கிடைத்தது என கீதை பதினைந்தாம் அத்தியாய சொற்பொழிவால்தானாம். தற்கொலையிலிருந்து காப்பாத்தினீங்க சுவாமி நீங்கதான்.

''இல்லைப்பா. எல்லாம் கடவுள்தான். சுகப்ரம்ம ரிஷி கடவுளே கடவுளேன்னு காட்டுவழியே கதறிக்கொண்டே போனாராம். பறவைக் கூட்டங்கள் ஏன் ஏன் என்று பறந்து வந்ததாம்.''

''உங்க ஜென் கதைகள் ஒண்ணு எனக்கு புரியவே இல்லை சுவாமி.''

''என்ன கதை?''

''ஒரு குருவை சிஷ்யன் கேட்டானாம். சந்தோஷம்ங்கறது என்னன்னு? அதுக்கு குரு தாத்தா செத்துப் போறார். அப்பா செத்துப் போறார். மகன் செத்துப் போறான். அதுதான் சந்தோஷம்னாராம்.'' செத்துப் போறது எப்படி சந்தோஷமா இருக்க முடியும்?''

''அந்தக் கதைல செத்துப் போறது விஷயம் இல்லைங்க. இயற்கை நியிதிப்படி காரியங்கள் நடக்கறதுதான் சந்தோஷம்ங்கறார் மாஸ்டர். தாத்தாவும் அப்பாவும் உயிரோடு இருக்க மகன் முன்னால - விபத்திலேயோ இருதய நோய்லயே அகாலமா செத்துப் போய்ட்டான்னா எத்தனை துயரம் பாருங்க. அதனாலதான் அதுக்காக யாருமே சாகாமல் இருந்தாலும் எத்தனை துன்பம் பாருங்க. அதனாலதான் சாவு வேணும். தக்க சமயத்தில் தக்க வரிசையில் எல்லாம் நடக்கணும். அதான் கதையின் உள்ளர்த்தம்'' என்றேன்.

''ரிமார்க்கபிள்'' என்றார். ''இப்படி யாராவது விளக்கமா சொன்னா எவ்வளவு எளிமையா இருக்கு சுவாமி.''

''சொல்லிருக்கேன். எல்லாம் காஸட்டில் கொடுத்திருக்கேன்.''

''வீட்ல எங்க காஸட் கேட்க விடறாங்க. எப்ப பார்த்தாலும் டிவிதான் சுவாமி. இதுக்கு ஏதாவது பரிகாரம் உண்டா சுவாமி.''

''இருக்குது. கேபிளை புடுங்கிருங்க. தூர்தர்ஷனை யாரும் பாக்க மாட்டாங்க.''

''என் மனைவி என்னை விவாகரத்து செய்துருவா'' என்று சிரித்தார்.

நான் கொட்டாவி விடுவதைப் பார்த்து ''சுவாமிக்கு ரொம்ப தொந்தரவு கொடுத்துட்டேன். மன்னிக்கணும்'' என்று விலகிக் கொண்டார்.

நான் ராத்திரிக்கு உண்டான மாத்திரைகளை விழுங்கிவிட்டு பிரார்த்தனை செய்துவிட்டு அல்ப சங்கிகைக்கு செல்லும்போது அவர் கோட்டைக் கழற்றி மரப்பெட்டியின் மேல் உட்கார்ந்துகொண்டு கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். அவர் கடமையை செய்து எனக்கு சந்தோஷமாக

இருந்தது. உலகத்தில் கிரமப்படி எதிர்பார்த்தபடி எது நடந்தாலும் எனக்கு சந்தோஷமாக இருக்கும்.

திரும்ப கம்பார்ட்மெண்டுக்கு வந்து கதவை மூடுமுன் கிரமம் தவறியது.

அந்தப் பெண்ணை என்னை நோக்கி வந்தாள். ''சுவாமி உங்ககூட கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

அவள் தலை கலைந்து கண்களில் கண்ணீர் தெரிந்தது.

''உக்காரும்மா. பேசணும்னா அவரையும் கூட்டி வரறது நல்லதில்லையா?''

''இல்லை. அவர் வேண்டாம். இந்த கதவை சாத்திரலாமா. எனக்கு உங்க மேல நம்பிக்கை இருக்கு.''

ஒரு கணம் யோசித்தேன். கடைசியாக நான் ஒரு பெண்ணுடன் தனியாக இருந்தது நிம்ஹன்ஸ் அறையில். பதினெட்டு வருஷங்களுக்கு முன். இறந்து போன என் தங்கை வினோதினியுடன். அதுதான் என் துறவுக்கே காரணம்.

''நான் தனியா உங்ககூட பேசணும்.''

''என்ன?''

''நான் ஒரு முடிவு எடுத்திருக்கேன். அது சரியா? நீங்கதான் சொல்லணும்.''

''என்ன முடிவு?''

''என் புருஷனை விட்டுர்றதா?''

''ஏம்மா?''

''கொடுமை. இம்சை. டார்ச்சர். ஏழு வருஷமா டார்ச்சர். மெண்டல் டார்ச்சர். ஃபிஸிக்கல் டார்ச்சர். எத்தனை நாளைக்குத்தான் பொறுத்து பொறுத்து பார்த்துக்கிட்டு. இப்ப ஒரு.....''

''அம்மா. நான் ஒரு சாமியார். பாச்சலர். எனக்கு வாழ்க்கையில் இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் பற்றி அறிவுரை சொல்ல தகுதியில்லை. கடவுளை அடையற மார்க்கம் வேணா சொல்லமுடியும். அதும் மற்றவங்களோட தேடற சமாசாரம்தான்.''

''வாழ்க்கை முழுவதுமே ஒரு தேடல்தான்னு சொல்லியிருக்கீங்க.''

''ஆமாம். சந்தோஷத்தை, நிம்மதியை, ஆரோக்கியத்தை எல்லாரும்தான் தேடிக்கிட்டு இருக்கோம்... தப்பான இடங்களில்...''

''இப்ப நீங்க சொல்லுங்க சுவாமி. நான் என்ன செய்யணும். அதை செய்துர்றேன்.''

''பாரும்மா. உங்க கணவர் கொடுமை பண்றார்னு நீங்க சொல்றீங்க. அவருடைய கட்சியையும் கேக்காம நான் எப்படி உபதேசம் செய்ய முடியும். அவரை கேட்காம நான் எதும் சொல் முடியாதும்மா. நியாயமுமில்லை. அவரை கேட்டா நீங்க கொடுமைப்படுத்தறதா கூட சொல்லலாம்.''

''சொல்லிடுவாரா? ஆனா சொல்ல முடியாது. எமகாதகன். ஒண்ணுமே நடக்கலை போல மூஞ்சியை வெச்சிக்கிட்டு... அப்பா! இந்த பூனையும் பாலைக்குடிக்குமான்னு. சுவாமி உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கலாம் இது. அவர் இதுவரை மூணுபேரைக் கெடுத்திருக்கார். ஆபிஸ்ல ஒருத்தியை, என் கஸின் ஒருத்தியை. அப்புறம் அவரைவிட வயசு ஜாஸ்தியா ஒரு பரதநாட்டியம் டான்ஸரை.''

''இதையெல்லாம் ஒரு துறவிகிட்ட சொல்றதில என்னம்மா பிரயோசனம்?''

''நீங்க என்ன பண்ணணும்னு சொல்லுங்க. நான் அதை செய்யறேன். ரொம்ப குழப்பத்தில இருக்கேன். கதவை திறந்து அடுத்த ஸ்டேஷன்ல எறங்கிடுன்னு சொல்லுங்க. இறங்கிடறேன்.''

''தேவையில்லைம்மா. அது ப்ரச்னையை எதிர்கொள்ற வழியில்லை. டோண் கிவ் அப். பாருங்கம்மா. உங்க கணவரை உங்கள் கொடுமைப்படுத்தறார், ஏமாத்தறார்னு தீர்மானமா தெரிஞ்சா.''

''சூடு போட்டிக்கார். காட்டட்டுமா?''

''வேண்டாம். நீங்க செய்ய வேண்டியது - உங்க அப்பா அம்மாவை கூட்டுவெச்சு...''

''எனக்கு அப்பா அம்மா இல்லை. அண்ணாதான் அமெரிக்காவில இருக்கான்.''

''அப்ப அவங்க அப்பா அம்மாவை கூட்டு வச்சுகிட்டு இந்தமாதிரி பண்றாரு உங்க மகன்..''

''சுவாமி. அதெல்லாம் ஆயிட்டுது. அதுக்கு அவங்க அப்பா அம்மா 'உனக்கு அவனை கட்டுப்படுத்த தெரியலன்றாங்க. நாங்க என்னம்மா செய்வோம். அவன் எங்க பேச்சு கேக்கறதை எப்ப சம்பாதிக்க ஆரம்பிச்சானோ அப்பவே நிறுத்திட்டாம்மா. வேணும்னா எங்ககிட்ட வந்து இருங்கறாங்க. சுவாமி நான் மனசுல அவர் கட் பண்ணியாச்சு.''

அப்போது அந்த கதவு திறந்தது.

தூக்க மிகுந்த கண்களுடன் ''என்ன சந்தியா இது. உன்ன எங்கெல்லாம் தேடறது. இங்க இருக்கியா? நினைச்சேன்'' என்றான் மிகுந்த கோபத்துடன்.

''சுவாமிகிட்ட பேசிக்கிட்டிருந்தேன் மனசு நிம்மதிக்கு.''

''என்ன பேசினா? புருசன் அடிக்கிறான், திட்டறான், சூடு போடறான்னுதானே?''

நான் புன்னகைத்தேன்.

அவன் என்னையும் கோபத்துடன் பார்த்தான்.

''பாருங்க. இவ சொல்றது எதுவும் கோர்வையா இருக்காது. மெண்டலா ரொம்ப கலக்கத்திலே இருக்கா.''

''தெரியறது.''

''ஸாரி, உங்க தூக்கத்தையும் கெடுத்து, சுவாமி நான் இதை சால்வ் பண்ணிக்கறேன். இது எங்க ப்ரச்சனை சுவாமி. சுவாமி இவ எப்பவுமே இப்படித்தான். தீர்மானமில்லாதவள்.. யாரைக் கண்டாலும் சுயசரித்திரத்தை விரிச்சுருவா. சந்தியா கொஞ்சம் மௌனமா இருக்க கத்துக்க. வாய் ஓயாம பேசாதே.''

''இல்லை ரகு. இவர் பெரிய சிந்தனையாளர். இவர்கிட்ட நான் செய்தது சரியான்னு கேட்டாகணும்.''

''இப்ப உனக்குத் தேவை சிந்தனையாளர் இல்லை, டாக்டர். குட்நைட் சுவாமி. ஸாரி ஃபார் தி ட்ரபிள்.'' என்று அவளை ஏறத்தாழ வன்முறையாக இழுத்துக் கொண்டு சென்றான். ''விடு ரகு, விடு ரகு'' என்றவளைக் கொண்டு சென்றான்.

எனக்கு அவள் மேல் பரிதாபமாக இருந்தது.

''கண்டாரை இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் -
கொண்டாரை அல்லால் அறியாக் குலமகள்போல

என்பதெல்லாம் குலசேகர ஆழ்வார் காலத்தோடு காலாவதியாகிவிட்டது. இப்போது பெண்கள் கேள்வி கேட்கத் துவங்கிவிட்டார்கள். ----------------- இதன் தரும நியாயங்களை அலச நம் பழைய இலக்கியங்கள் போதுமா என்பதே தெரியவில்லை.

நிர்மமோ ரிஹங்கார சமதுக்க சுக போன்ற கீதை சுலோகங்கள் எல்லாம் இவர்களுக்கு உணர்ச்சிவசப்படும் பொறுமையற்ற இளைய சமுதாயத்துக்கு உதவாது.

என்று எண்ணியவாறே உறங்கிவிட்டேன்.

தாதர் வருமுன் யாரோ கதவைத் தட்ட, திறந்தேன்.

அவர்கள் இருவரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவள் சுத்தமாக முகம் கழுவி புடவை மாற்றி பவுடர் பூசி, தலைவாரி, பொட்டிட்டு, புதுமணப்பெண் போல இருந்தாள். அவன் வெயில் கண்ணாடி அணிந்திருந்தான்.

''சுவாமிக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன் என் ப்ரச்சனையை உங்ககிட்ட கொடுத்து... ஆசீர்வாதம் பண்ணுங்க எங்களை'' என்றார்.

''சமாதானமாயிடுச்சாம்மா?''

''ம்'' என்றாள் கண்ணைத் துடைத்துக் கொண்டு

''தீர்க்க சுமங்கலி பவ.''

அவள் அவனைப் பார்த்து கண் சிமிட்டி சிரித்தாள். ''சந்தோஷமா இருங்கன்னு சொல்லுங்க சுவாமி.அது போதும்'' என்றான். விசிட்டிங்கார்டு கொடுத்தா. ''முடிஞ்சா வீட்டுக்கு வாங்க -------''

''எப்படியோ நீ தீர்மானிச்சதில சந்தோஷம்தாம்மா'' என்றேன்.

''இவர்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டியா சந்தியா?''

''இல்லை. பாதிதான் சொன்னேன். அதுக்குள்ள நீ வந்துட்டியே!

''உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்.''

''என்ன?''

''உங்க திருமண தேதி சொல்லுங்க.''

''எதுக்கு?''

''வேற ஒண்ணும் இல்லை. வாழ்த்து அட்டை அனுப்பறேன்'' என்றேன்.

அவன் ''ஜனவரி இருபத்தெட்டு'' என்றான்.

அவள் ''மார்ச் பதினெட்டு'' என்றாள்.